**வளர்ச்சித் திட்டங்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லை:**

# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு பட்டை நாமம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கருத்து!

சென்னை, பிப். 3 -

ஒன்றிய பட்ஜெட் குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டிற்கான நிதி உதவிகள் - மழை வெள்ள நிவாரணம் என்ற வகையிலோ அல்லது வளர்ச்சித் திட்டங்களுக்கான எந்த அறிவிப்போ, நிதி ஒதுக்கீடு ஏதும் இடம்பெறாதது பெருத்த ஏமாற்றமாகும்! பட்டை நாமம் தீட்டப்பட்டுள்ளது.



**பீகார் சட்டமன்றத் தேர்தலை நோக்கி!**

மாறாக, இவ்வாண்டு பீகாரில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை மனதிற்கொண்டோ அல்லது கூட்டணியைத் தாங்கிப் பிடிப்பதற்காகவோ, பீகார் ஆதரவு ஆட்டங்காணாமல் இருப்பதற்காகவோ அறிவிக்கப்பட்ட திட்டம் - புதிய திட்டம் - பழைய திட்டங்களை மேம்படுத்துதல் என்று பீகாரை முன்னிறுத்தியே முழுக்க முழுக்க பட்ஜெட்டை - மைனாரிட்டி அரசான ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாற்காலி ஆட்டங்காணாமல் பாதுகாக்க ஓர் அரசியல் பாதுகாப்பிற்கான கருவியாகவே பட்ஜெட்டைப் பயன்படுத்துகிறது என்பது தெள்ளத் தெளிவாய் விளங்குகிறது!

சென்ற ஆண்டு பட்ஜெட்டில் ஆந்திராவுக்கு இது போல் தனி நிதிச் சலுகை அளித்ததுபோல், இவ்வாண்டு பீகாருக்கு வாரி வழங்கப்பட்டுள்ளது!

“சூட்சமம் புரிகிறதா தம்பி?” என்று முன்பு அறிஞர் அண்ணா எழுதிய தலைப்பைத்தான் வெகுவாக நினைவூட்டுவதாக இது உள்ளது!

திருக்குறள் - வள்ளுவரைக்கூட இம்மாதிரி அரசியலுக்குத் துணையாகத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். மற்றபடி தமிழ், தமிழ்நாட்டிற்கு வேறு ஆக்கப்பூர்வ உதவி ஏதும் இடம்பெறவில்லை. எல்லா மாநில மக்களும் இணைந்த கூட்டாட்சிதான் இந்திய ஒன்றிய ஆட்சி என்பதைப் புறக்கணிப்பது நியாயமா?

**கூட்டுறவுக் கூட்டாட்சி என்பது வெறும் வாயுரைதான்!**

இடையே “கூட்டுறவு கூட்டாட்சி” (“Cooperative federalism”) என்ற ‘நாமாவளி’ பட்ஜெட் வெறும் வாயுரை மட்டும்தானே பயன்பட்டுள்ளது! தமிழ்நாட்டு மக்களின் வரி வருமானம் பெற்றும் இப்படி ஓரவஞ்சனை, பாராமுகம், அரசமைப்புச் சட்டப்படியும், அறவழிக் கண்ணோட்டத்திலும் நியாயம்தானா?

தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்கள் புரிந்து சிந்திப்பார்களாக!

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் பட்ஜெட்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, பிப். 3 -

ஒன்றிய பட்ஜெட் குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நாடாளுமன்றத்தில் 2025-26 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கையை மந்தமான பொருளாதார வளர்ச்சி, அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு சரிவு போன்ற நெருக்கடிகளுக்கு இடையில் தாக்கல் செய்து இருக்கிறார்.

நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஜி.டி.பி.) 6.3 முதல் 6.8 விழுக்காடு வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது மிக குறைவான வளர்ச்சியாகும். உணவு பணவீக்கம் 7.5 விழுகாட்டிலிருந்து 8.4 விழுக்காடு அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்று பொருளாதார ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் நிதிநிலை அறிக்கையில், உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் உரிய அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது.

**வேலைவாய்ப்புகளை அதிகரிக்க செயல்திட்டங்கள் இல்லை!**

வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு 1,71,457 கோடி என்பது போதுமானது அல்ல.வேளாண் உற்பத்தியை அதிகரிக்க மாநில அரசுகளுடன் இணைந்து புதிய திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்ற அறிவிப்பு ஏட்டுச் சுரைக்காய்தான். ஏனெனில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த பத்து ஆண்டுகளாக விசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவோம் என்று கூறி வந்தது இது வரையில் நடைமுறைக்கு வரவில்லை. வேளாண் இடு பொருட்கள் விலை உயர்வு இரசாயன உரங்கள் விலை அதிகரிப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்த அறிவிப்புகள் எதுவும் இல்லை.



அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை பகுப்பாய்வு செய்திட தொழில் முனைவோர் நீண்ட காலமாக கோரி வருவதை நிறைவேற்றவில்லை. மேலும் மந்தநிலையில் உள்ள இந்நிறுவனங்களின் மீட்சிக்கு புதிய திட்டங்கள் இல்லை. நாட்டின் வளர்ச்சியில் எம்.எஸ்.எம்.இ. முகாமையானது என்பதை ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

ஜி.எஸ்.டி. வரியில் மாநிலங்களுக்கு உரிய நிதிப் பகிர்வை அளிக்காமல் 1.5 இலட்சம் கோடி வட்டி இல்லாத கடனாக மாநிலங்களுக்கு வழங்கப்படும் என்பது எந்த வகையிலும் மாநிலங்களுக்கு பயன் அளிக்காது. சட்டமன்றத் தேர்தலை எதிர் நோக்கி உள்ள பீகார் மாநிலத்திற்கு சிறப்புத் திட்டங்களை அறிவித்து, நிதி ஒதுக்கீடு செய்துள்ள ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து இருப்பது கண்டிக்கத்தக்கதாகும். தமிழ்நாடு அரசு கோரிய பேரிடர் நிவாரண நிதி, மெட்ரோ இரயில் பணிகளுக்கான நிதி குறித்த அறிவிப்புகள் இல்லை.

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் திட்டங்களை பாஜக அரசு தொடர்ந்து செயல்படுத்துகிறது. காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 74 விழுக்காட்டிலிருந்து 100 விழுக்காடு உயர்த்தி இருப்பது எல்.ஐ.சி. நிறுவனத்தை தனியார் மயத்தை நோக்கி தள்ளும் முயற்சியாகும்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் அணு மின் உற்பத்திக்கு தடை விதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்தியாவில் மேலும் ஐந்து அணு மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்து இருப்பதும், 20 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கி இருப்பதும் சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்கும்.

சுகாதார துறைக்கு ஜி.எஸ்.டி.யில் 5 விழுக்காடு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பு இருந்த நிலையில், ரூ 98,311 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்திருப்பது போதுமானது அல்ல. ஏனெனில் இந்தியாவில் 350 மில்லியன் மக்களுக்கு அடிப்படை மருத்துவ உதவிகள் கிடைப்பது இல்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. அதற்கு ஏற்ப நிதி ஒதுக்கப்படவில்லை.

**தமிழ்நாட்டின் ரயில்வே துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படவில்லை!**

புற்று நோய் உள்ளிட்ட உயிர்க் காக்கும் மருந்துகளுக்கு வரிவிலக்கு, கிராமங்களில் 1.5 இலட்சம் தபால் நிலையங்கள், சாலை வியாபாரிகளுக்கும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் காப்பீடு அட்டை வழங்குதல் போன்ற வரவேற்கத்தக்க கூறுகள் இருந்தாலும் ஒன்றிய நிதி நிலை அறிக்கை ஒட்டுமொத்தமாக ஏமாற்றத்தையே தருகிறது.

இவ்வாறு வைகோ குறிப்பிட்டுள்ளார்.

**ஒன்றிய அரசின் பட்ஜெட்டில்**

# தமிழ்நாடு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் புறக்கணிப்பு!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, பிப். 3 -

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் புறக்கணிக்கப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது என மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது என்ற பழமொழிக்கு ஒப்ப ஒன்றிய அரசின் பட்ஜெட் அமைந்துள்ளது.



இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான திட்டங்கள் ஏதும் அறிவிக்கப்படாதது கடும் கண்டனத்துக்குரியது. பீகார் மாநிலத்திற்கு தேர்தல் வரயிருப்பதால் நிறைய திட்டங்கள் அந்த மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிற்கு நெடுஞ்சாலைகள் குறித்து ரயில்வே அறிவிப்புகள் குறித்து எதுவும் புதிதாக வழங்கப்படவில்லை.

ஏவுகிறவனுக்கு வாய்ச் சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை என்பதைப் போல கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வாரி வழங்கிவிட்டு ஏழைகள் விவசாயிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு வெறும் வார்த்தைகளை தவிர உருப்படியான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகள் பெரிய அளவில் நாட்டிற்கு இல்லாத போது கூடுதல் உற்பத்தி ஏற்றுமதியில் அரசு கவனம் செலுத்தவில்லை. ஏற்றுமதி 20 சதவீதத்திற்கும் குறைவாகவும் 4.8சதவீத நிதி பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது ஒன்றிய அரசின் கையாலாகாதத் தனத்தை மெய்ப்பித்திருக்கிறது.

விலைவாசி குறைப்பு பெட்ரோல் டீசல் விலை குறைப்பிற்கான எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை. விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் எந்த அறிவிப்பும் இருப்பதாக தெரியவில்லை.

மொத்தத்தில் இந்த பட்ஜெட் இந்திய மக்களை வெறும் வார்த்தைகளால் ஏமாற்றி இருக்கும் வார்த்தைகள் நிரம்பிய கோப்பு அவ்வளவே.

இவ்வாறு எம்.எச். ஜவாஹிருல்லா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஒன்றிய அரசின் பட்ஜெட் அறிக்கை!**

# பீகாருக்கு வளர்ச்சிக்கான நிதியும் தமிழ்நாட்டிற்கு திருக்குறளும் கொடுத்த பட்ஜெட்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிப் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, பிப். 3 -

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை பீகாருக்கு வளர்ச்சிக்கான நிதியும் தமிழகத்திற்கு திருக்குறளும் கொடுத்த பட்ஜெட் என கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

மூன்றாவது முறை பா.ஜ.க. ஆட்சி அமைத்த பிறகு தாக்கல் செய்யப்படுகிற முழு நிதிநிலை அறிக்கை. சிறு குறு தொழில்களையும், விவசாயத்தையும் காப்பாற்றும் என்ற எண்ணத்தில் மண்ணை போட்ட நிதி நிலை அறிக்கையாக ஒன்றிய நிதி அமைச்சர் தாக்கல் செய்திருக்கிறார்.

தனிநபர் வருமான வரி உச்சவரம்பு உயர்த்தப்பட்டது என்ற முகத்திரையின் பின்னால் பட்ஜெட்டின் வளர்ச்சிக்கு உதவாத அறிவிப்புகள் மறைந்திருக்கின்றன. வருடம் 12 லட்சம் சம்பளம் வாங்கும் தனிநபருக்கு சலுகை என்ற விதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மிக குறைந்த அளவே இந்த அளவிற்கு சம்பளம் வாங்குபவர்கள் நாட்டில் இருப்பார்கள்.

வருடம் 12 லட்சம் சம்பளம் வாங்கும் தனி நபர்களுக்கு சலுகை என்ற அறிவிப்பை அந்தப் பயனாளிகள் சார்பாக வரவேற்கின்றேன். விவசாய உற்பத்தி பொருட்களும் குறைந்தபட்ச விலையில்



கிடைக்குமென்று எதிர்பார்த்த விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். நீர் பாசன திட்டங்களுக்காக குறிப்பாக நதிநீர் இணைப்பிற்காக அறிவிப்பு இல்லாததும் ஏமாற்றம் அளிக்கிறது.

தொடர்ந்து விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படுமென்ற அறிவிப்பு இருக்கும் பொழுது கடனை திருப்பி கட்டுவதற்காக லாபம் ஈட்டும் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. சில லட்சங்கள் வருட வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகளும் வருடத்திற்கு 500 கோடி ரூபாய் வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகளும் ஒரே கோட்டில் வைக்கப்பட்டு பார்க்கப்பட்டிருப்பது வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

வருடத்திற்கு சில லட்சங்கள் முதல் ஐந்து கோடி வரை வருட வருமானம் ஈட்டுகின்ற தொழிற்சாலைகள் சிறு தொழில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு தனி சலுகைகள் அறிவிக்கப்படுமென்ற எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது.


நஷ்டத்தில் இருக்கின்ற தொழில்களை காப்பாற்றுவதற்கு எந்த அறிவிப்பும் இல்லாதது வருத்தமளிக்கிறது. உலக சூழ்நிலைகளின் காரணமாக லாபம் குறைவாக ஈட்டுகின்ற தொழில்களுக்கு வட்டி சலுகை அளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் ஏமாற்றப்பட்டுவிட்டது. கேன்சர் மையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு நாட்டின் சுற்றுச் சூழலை கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த கேன்சரை உருவாக்குகின்ற தொழிற்சாலை மற்றும் நகரப் பகுதி கழிவுகள் கலக்கின்ற நீர் நிலைகளை மேம்படுத்த அறிவிப்புகள் இல்லை. கேன்சர் வராமல் தடுப்பதற்கான முயற்சிகளும் இல்லை. நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த நிதிநிலை அறிக்கையாக இந்த நிதி நிலை அறிக்கை இல்லை.

இவ்வாறு ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**இன்று அண்ணா நினைவு நாள்!**

# “திராவிடம்” என்றாலே, அண்ணாவின் நினைவுதான்!



“திராவிடம்” என்னும் கருத்தியலும், “இன எழுச்சி” என்ற செயல் திட்டமும், அண்ணா அவர்களின் இதயத்துக்கு இதமானவை, நெஞ்சுக்கு நெருக்கமானவை. தாம் தொடங்கிய இதழுக்கு ‘திராவிட நாடு ‘ என்றுதான் அப்போதே பெயரிட்டார் அண்ணா. அண்ணா, சேலம்மாநாட்டில் முன்மொழிந்த தீர்மானத்தினாலேயே ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’, “திராவிடர் கழகம்” என்றாயிற்று என்பது இயக்க வரலாற்றின் முக்கிய பக்கம். பிறகு திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, பிறிதோர் இயக்கம் கண்ட போது அண்ணா, “திராவிட முன்னேற்றக் கழகம்” என்றே பெயர் சூட்டினார். அந்தப் பெயரே, ஆழ்ந்த அழகிய அருமைப் பெயராகி, பார்போற்றும் பவளவிழாப் பெயராக நீடித்து நிலைத்திருக்கிறது. எத்தனை யுகங்கள் கடந்தாலும் 1949ல் அண்ணா தந்த அந்த அருமைத் திருப்பெயர் அணுவளவும் மாறாது!

நமது கலையை **‘திராவிடக் கலை’** என்றார் அண்ணா. தொன்று தொட்டு நடைபெற்றுவரும் ஆரிய திராவிடப் போராட்ட விபரங்களையும், மனப் புரட்சியின் மூலம், இன எழுச்சிக்கான தேவை குறித்தும், அதன்வழி இன விடுதலை ஏற்படும் என்ற நன்னம்பிக்கையுடன் நாடெங்கும் சென்று தொடர்ந்து பேசியும், ஏடெடுத்து இடையறாது எழுதியும், நம் மக்களை விழிப்புறச் செயலாற்றியவர் அண்ணா.

**குடந்தை மாணவர் மாநாட்டில் உரையாற்றிய போது அண்ணா, ‘திராவிட மாணவர்களே ‘ என விளித்து, “நீண்ட நாட்கள் கழித்து, நாட்டுப் பற்றும் இனப் பற்றும் பூத்திருக்கிறது. இது சொற்பொழிவுச் சோலையாக மட்டும் நின்றுவிடக் கூடாது, கற்பனைப் பூங்காவிலே உலவ முடியாது! இன எழுச்சியைப் பரப்புங்கள்! உங்கள் கரமே, புது உலகச் சிற்பம் சமைக்க வல்லது. உறுதி கொள்ளுங்கள், உற்சாகத்தோடு உழைக்க வாருங்கள்” என்று கேட்டுக் கொண்டார். திராவிட இன உணர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட முயற்சி என்று வகைப்படுத்தினார் அண்ணா.**

சுதந்திர இந்தியாவில் வாலிபர்கள் தேவை என்று சொன்ன அண்ணா, அதற்கான காரணங்களையும் அடுக்கடுக்காக எடுத்து வைத்தார். “வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள். அவர்தம் உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும். வாழ்க்கை எனும் பொய்கையிலே நஞ்சு கலக்கப்படாத பருவம்; பகுத்தறிவு என்னும் பகலவனால் எறிபட்டு விஷப் பூச்சிகள் போன்ற சுயநல, சுயசுகக் கருத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும், தூய்மையான அந்த வாலிப உள்ளங்களில். சந்தனக் காட்டைக் கடந்து, மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல், அது போன்றது வாலிபம்” என்றெல்லாம் வாலிபத்தின் வண்ணத்தை, வற்றாத எண்ணத்தினால் குழைத்து வழங்கினார் அண்ணா!

**1945ல் திராவிடர் நிலை குறித்துப் பேசிய போது அண்ணா, “திராவிடர் நாம் என்ற இன உணர்ச்சி நம்மிடையே எழுச்சி அடைய வேண்டும். எனவேதான் ஜஸ்டிஸ் கட்சியை திராவிடர் கழகம் என அழைக்கிறோம். இது நம்முடைய மாற்றுத் தோழர் களிடையே மாற்றத்தையும், கூட்டுத் தோழர்களிடையே கொந்தளிப்பையும் உண்டாக்கியது..” என்று விவரிக்கலானார். மேலும், “நம் இனம், இந்த நாட்டுக்கு உரிமையாளரான இனம், நாடாண்ட இனம், நாடாளப்போகும் இனம், வாணிபத்திலே சிறந்த இனம், வகையாக வாழ்ந்த இனம், நாகரிகம் மிகுந்த இனம், சரித்திரப் பிரசித்தி பெற்ற திராவிட இனம், இலக்கியத்திலே இன்பம் கண்ட இனம், வீரம் மிக்க இனம்!”; “உழவுக்கும் தொழிலுக்கும் உயர்வு கூறுவது திராவிடக் கலாச்சாரம். திராவிடரின் கண்கள், ஏர்முனை, கடலடி, காட்டுப் பாதை, நாட்டுநிலை இவைகளின் மீது செல்வன” ; என்று நம் இனப் பெருமைகளைச் சொல்லி எழுச்சி ஊட்டினார் அண்ணா !**

“தோழமை, ஆழ்ந்த கருத்துள்ள அழகான சிறு சொல். ஒற்றுமை – கூட்டுறவு – ஒப்பந்தம் – கூடி வாழ்தல் – நட்பு – அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவுவரை மட்டுமே செல்லக் கூடியவை – முழுத் திருப்தி தருபவை அல்ல. தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை – ஆனால், தோழமை, இவ்வளவுக்கும் மேலான ஓர் நிலை. பேதம் நீங்கிய, நீக்கப்பட்ட அல்லது கவனிக்கப்படாத நிலை அல்ல – பேதம் ஏற்படாத நிலை – ஏற்பட முடியாத நிலை..” என்று, சமதர்மத்தைப்பற்றியும், அதன் முழுப் பயனாகிய தோழமை குறித்தும், விளக்கம் கொடுத்து, தொடர்ந்து **தம் தம்பிமார்களை அறிவுமயப் படுத்தியவர் அண்ணா !**

**அறிஞர் அண்ணா அவர்களால்தானே, நமது இந்த இயக்கம் ‘அறிவியக்கம் ‘என அழைக்கப் பெறலானது. செறிவான தன்மானமும், செழுமையான அறிவும், திராவிடரின் அணிகலன் என்று அண்ணா நம்பினார்; அதைச் சென்ற இடமெல்லாம், அனைவர்க்கும் சூட்டி அகமகிழ்ந்தார்; பரவிப் பெருகிப் பளிச்சிடுவது கண்டு பரவசப்பட்டார்!**

“ஆரிய – திராவிட முரண்பாடுகளை நாம் வாழ்க்கையிலேயே காணலாம். கலையிலே, கருத்திலே, இன்ன பிற எல்லாவற்றிலும் காணலாம். எடுத்துக்காட்டாக ஒரு சில உரைக்கின்றேன்; உள்ளத்திலே ஊன்றுங்கள்! ஆரியர்களின் கடவுள் அனந்தம் கோடி, அநேக அவதாரங்கள், அற்புத வடிவங்கள்; ஆனால் திராவிடர், “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற பண்பைப் பெற்றிருந்தனர். ஆரியரிடையே சாதி வேற்றுமை உண்டு; திராவிடரிடம் இல்லை. ஆரிய மொழி வேறு; திராவிட மொழி வேறு” என்று அண்ணா பட்டியலிட்டார்.

திராவிட சமூக அமைப்பையும் அண்ணா விளக்கியிருக்கிறார். இந்த சமூகத்தில், “பாடுபடுவோர் பலனை அனுபவிப்பர்; பதைக்க மாட்டார்கள்; உழைப்பு வீணாகாது; உலுத்தர் உயரமாட்டார்கள்; சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி உண்டு;”

**“விடுதலைப் போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி; வீரச்செயல்கள், தியாக நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர்முகாமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம் அவர்களின் ஒரே நோக்கம், ஒரே இலட்சியம், தன்னாட்சி பெறுவது என்பதுதான்” என்று போர் குறித்தும், அதன் நோக்கம் குறித்தும் எழுதினார்.**

நிலையும் நினைப்பும், நாடும் ஏடும், வலிவும் பொலிவும், என் நாடு பொன்னாடு எங்கும் இதற்கில்லை ஈடு, இலட்சியம் பெரிது வெற்றி அல்ல, எண்ணிக்கையை விட இயல்பே முக்கியம், ஓட்டு முறையன்றி வேட்டுமுறை கூடாது, மறக்கலாம் ஆனால் மறைக்க முடியாது, – போன்ற சொல்லாக்கங்களை அண்ணா உருவாக்கினார், தம்பிமார்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக; அவை இன்றளவும் பழகு தமிழாகி விட்டன. எனினும், “திராவிடம்” என்ற கருத்தியலில், அண்ணா கொண்டிருந்த கூர்த்த மதியும், நாட்டமும் குறிப்பிடத்தக்கது.

**நமது இயக்கத்தின் மூலவரான அண்ணா அவர்களின் எண்ணத்தை ஒட்டியே, அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னெடுத்துச் சென்றதைக் கண்டே, இன்றைய நம் திராவிட நாயகர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தாம் நடத்தி வருவது “திராவிட மாடல்” ஆட்சி என்று, செல்லுமிடந்தோறும் சொல்லி வருகிறார்; அது சாலவும் பொருத்தம் தானே!**

★★★

**கி.இராஜமாணிக்கம்**

★★★